[1982 மார்ச் 6

சாத்தப்பாடியில் ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை திறக்கும் திட்டம்

*வினா எண். 387. **திருமதி தா. இராசாம்பாள் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

அ) ஒன்றியக் குழுக்கள் கலைக்கப்பட்ட பிறகு, தலைவாசல் ஒன்றியம் சாத்தப்பாடியில் ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை திறப்பதற்கு வழங்கப்பட்ட அரசின் ஆணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

ஆ) ஆம் எனில், வீரகனூர் பேரூராட்சியில் திறக்க அரசு மறு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ). சாத்தப்பாடி ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை செயல்படுத்தவும், வீரகனூரில் அரசு மருந்தகம் திறக்கவும் அரசு ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் நகரியம்.

*வினா எண் 388— **திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடைக்கானல் நகரியம் ஏற்கனவே நகரசபையாக இருந்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை நகரியமாக மாற்றியதன் அவசியம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) கொடைக்கானல் நகரசபையின் வருவாய் அதிகப்படுத்த முடியாத நிலையில் இருந்ததால் நகரசபையால நகரத்தை மேம்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து ஈர்க்கும் பணியைச் செய்ய இயலவில்லை. ஆகவே நகரசபையை நகரியமாக மாற்றுவதால் பல பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று கருதப்பட்டதால் நகரியமாக மாற்றப்பட்டது.